உ

திருவருண் மாண்பினராகிய

ஜோர்ஜ் மன்னர்

இயன்மொழி வாழ்த்து.

பண்டிதர், ச. கந்தையபிள்ளை அவர்கள்
இயற்றியது.

His Majesty the King's BIRTHDAY ODE.

COMPOSED BY

Pandit S. CANDIAH PILLAI.

Lecturer in Tamil.

GOVERNMENT TRAINING COLLEGE,

COLOMBO.

PRINTED AT
THE DIAMOND PRESS.
NO. 174, SEA STREET, COLOMBO.

Price 25 cents. விலை சதம் 25.

FOREWORD.

THE 55th ANNIVERSARY

OF

HIS MAJESTY the KING'S BIRTH-DAY

was celebrated on June 3rd 1920, throughout the Island, with more enthusiasm and eclat than on previous occasions, as this was the first occasion of celebrating His Majesty's Birth-day after the year 1914, the time when the Great European War broke out, The Hindu Conception of the King is entirely Divine, and he is said to be the incarnation of Vishnu, the God of Protection. This Ode was composed by me in Honour of our Gracious Majesty on His Birth-day Celebration, after the manner of the ancient Tamil Bards who sang the praise and victory of their Kings on similar auspicious occasions, and was sung in the presence of my students and others. Therefore, no further introduction is necessary on my part, on presenting this poem to the public. I hope to publish this shortly with copious notes, translation, and an account of the Birth-day Celebrations in Colombo, so that it may be useful to students as well as to the public.

S. C.

முகவுரை.

———o———

திருவளர் கோவை மருவுவெள் ளருவையில்
விசய ராச விநாயகற் றெழுது
குமர சரவண குருபர ராதிய
நிலவுபல் லுருக்கொடு குலவியெமை யாண்ட
சங்கத் தமிழின் றலைமைப் புலவனும்
நல்லூ ரறுமுக னண்மல ரடியிணை
மனமொழி மெய்யுற வைத்துநனி வணங்குதும்
தொன்மனு நெறிவழா அ ஜோர்ச்செனும்
மன்னவ னியன்மொழி வாழ்த்துநலம் பெறவே

——

இயன்மொழி வாழ்த்து எனப் பெயரிய இச்செய்யுள், திருவருண் மாண்பினராகிய மன்னர் பெருமானது திருவவதாரத் திருநாளைக்குறித்த, ஐம்பத்தைந்தாவது ஆட்டை விழவுக்கொண்டாட்ட காலமாகிய, நிகழும் ஜூன் மாசத்து 3-ம் தேதி (3-6-1920) வியாழக்கிழமை, எமது நண்பர் சிலரது விருப்பங்காரணமாகவும் உரிமைபற்றி யெழுந்த காதல் காரணமாகவும், எம்மால் இயற்றி, எமது மாணவகர் சிலரும் பிறரும் கூடிய சபையிற் படிக்கப்பட்டது. முதலில் மன்னர் பெருமானது இயல்பு கூறினமையால் இயன்மொழியும், பின்னர் ஞாயிறுபோலவும், திங்களஞ் செல்வன்போலவும் வாழி என வாழ்த்தினமையால் வாழ்த்துமாய் அமைதலின். இஃது, இயன்மொழி வாழ்த்து எனப்பட்டது. 'இன்னும் வேறுபடவருவனவெல்லாம் இதன்கண் அடக்குக" எனவும்,தொல்காப்பியப்புறத்திணையியலுள் (தொல்-பொருள்-புறத்திணை-35) உரைகாரராகிய உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் கூறுதலின், பிறசில கூறப்படினும், இயன்மொழிவாழ்த்து என்பதில் இழுக்கின்மை உணரப்படும்.

இக்கவியைக்கேட்ட நண்பர் சிலர், கல்லூரி மாணவர்க்கும் பிறர்க்கும் பயன்படுமாறு, அரும்பதவுரை குறிப்புரைகளோடு ஆங்கில மொழிபெயர்ப்புஞ் சேர்த்து இதனை அச்சிட்டு வெளிப்படுத்துமாறு வேண்டினர். வேண்டியவாறு அரும்பதவுரை குறிப்புரைகளும் அற்றைநாளில் கொளும்பு நகரின்கண் இராசமாளிகையிலும் கல்லூரிகளிலும் பிற இடங்களிலும் நிகழ்ந்த ஆட்டைவிழவுக் கொண்டாட்ட வரலாறும் ஒருவாறு விரிவுற எழுதி முடிக்கப்பட்டன. ஆயினும், செய்யுள்வடிவான ஆங்கில மொழிபெயர்ப்பு ஏற்றவாறு விரைவிற் கைவரப்பெறுமையானும், காகித விலைமிகுதியும் பிறவும் பற்றிய அவகாசக்குறைவானும், அவற்றையெல்லாம் சிலநாட் சென்றபின்னர் ஒருங்குசேர்த்து வெளிப்படுத்த நிச்சயித்து, இப்பொழுது மூலபாடத்தை மாத்திரம் வெளிப்படுத்துகின்றாம்.

"பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ" என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பருங் கூறுதலின், முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமப் புலவர்களே, இராசபத்தி காரணமாக எழுந்த இக்கவியையும் குறை நோக்காது கொள்ளுமாறு வேண்டிக்கோடல் மிகையாகும். சொற்பாலுமிழ்ந்த மறுக்கள் உளவாயினும், புலமைமிக்காராகிய அவர் அவற்றைத் தம்மதியாற் கழுவிப் பொற்பாக அமைத்துக்கொளற்பாலர் என்க.

ச. க.

கொளும்பு, 15-6-20.

ஆங்கில பௌம அரசரும், பரதகண்ட சக்கரவர்த்தியும்,

திருவருண் மாண்பினருமாகிய

ஐந்தாம் ஜோர்ஜ் என்னும்

அரசர் பெருமானார் மீது

அவரது திருவவதாரத் திருநாளைக் குறித்த

ஐம்பத்தைந்தாவது ஆட்டை விழவுக்

கொண்டாட்ட காலத்தில்

கொழும்பு, அரசினர் ஆசிரிய கல்லூரித் தமிழாசிரியர்

தென்கோவை ச. கந்தையபிள்ளை

அவர்கள் பாடிய

இயன்மொழி வாழ்த்து.

நேரிசையாசிரியப்பா.

ஓங்குகடல் வளைஇய வீங்குநிலப் பரப்பைப்
பண்டுதன் னடிமலர் கொண்டுதாஅ யளந்து
பால்விரி தூங்கப் பாயன் மீமிசை
அம்புயன் முதலா வமரர்போற் றிசைப்பத்
திருவநீள் செம்மணி யொருபாற் கவினக்
கருமணி கிடந்த காட்சியது கடுப்பத்
தாமரை யுறையுங் காமரு தெய்வத்
திருவொடும் பொலியு மொருபெருங்கடவுள்

வலப்புரித் தடக்கை மாஅல் போலப்
பரிதியங் கடவுள் படுபறி யாப்பேர்
இருநில முழுது மொருகோ லோச்சி
ஆணையா லளந்து மாணமர் வடவெண்
பனிக்கடன் மரீஇய பாய்புக ழாங்கில
பவுமத்துச் சிறந்து பல்வளம் பழுனி
விண்வத் துயரிய கண்செலாச் சிமயத்து
மேனிலை வதியு மெல்லியன் மடநலார்
முத்துற ணகைநிலா முகமதிக் குடைந்து
களிநிலவு காலு மொளிசமழ்ப் புறீஇய
மதிய மேக்கற்று வயங்குகா லதர்தொறும்
வனப்புநனி கவரும் வகைமைமேற் கொளீஇ
ஆடியிற் றிகழு மாடமா ளிகைகளும்
உலகுவிலை போகா தொப்பின் றுயர்ந்த
அருங்கல வெறுக்கையு மொருங்குநனி காணூஉ
மணிக்கா லிஃதென நுணித்துநன் குணர்ந்
தளகை விடைகொள்ளு மணிநலங் கெழுமி
நிலமகண் முகத்துக் குலவுபூந் திலகம்
என்னநின் றிலகு மிலண்டன்மா நகரிற்
பொற்றுணர் மலிந்த கற்பகா டவியொடும்
இந்திர சுதன்மையே யந்தில்வந் தமர்ந்தெனத்
தெய்வத் தபதியர் கைபுனைந் தியற்றுது
மனத்தினின் வகுத்தென வயங்குறூஉம் வனப்பின்
ஓவநுண் டொழிற்கெலா மேவுபதி யாகி
ஐம்பெருங் குழுவு மெண்பே ராயமும்

மணிமுடி மன்னரு மரபினிற் சூடீஇ
ஆடகம் புனைந்து பீடுயர் பன்மணிப்
பாமொளி பரப்பும் பைம்பொற் கோயிலிற்
காணுநர் கண்ணிமை பூணுறு மலங்கி
இமையா நாட்டத் தியவுள ரேய்க்கும்
எழினலம் பழுனி முழுமணி யியன்று
விண்ணவர் கோமான் வியன்கலப் பேடகம்
வாய்திறந் தனைய மண்டப நாப்பண்
மருப்பி னியன்று வச்சிரம் புனைந்து
மரகதங் குயிற்றிய வாளரிப் பீடத்து
மன்னுபே ருதய மால்வரை முகட்டுச்
செங்கதிர் கிளர்ந்தெனச் செழுங்கதிர் பரப்புந்
தபநியத் தியன்று நவமணி குயின்ற
திருமுடி புனைந்து செங்கோ லேந்தி
அளியரேம் பன்னு ளாற்றுநல் லறமே
உருவுகொண் டனைய மருவுகோ லத்துடன்
அமையாப் பேரரு ளன்னை மேரியாந்
திருவொடும் பொலியு மரச ரேறே!
மறம்படு பண்பி னறன்கடை மலிந்து
வழியறல் காட்டும் வழியென வுணராது
பழிநெறி பயின்று பல்குவளங் கொண்மார்
அறனுறு நெறிவழாஅ வைவவொடு சினைஇப்
பொருதுகளத் தவிந்து கிளையொடு மாண்ட
வணங்கா மணிமுடி மன்னவ ரேருந்
துன்மதி நிலைஇய சுயோதனு தியர்போல்

உலகெலா நடுங்க வுருமிற் சீறாஉச்
செருமாண் ‡யவனரொடு சேரவுத் தியர்முதல்
விடங்கெழு படையின ருடங்குதுணை யமைதர
மண்ணசைஇ யெழுந்து வஞ்சி சூடிய
எஃகு மஃகிய சேகிற் றிகழ்ந்து
நன்மாண் பிறமுளச் சான்மா னியரொடு
சேரார் நெஞ்சந் தெருமர றழைப்பக்
கடிகெழு முரசின மிடியென முழங்கப்
பாவைநுண் மணலினும் படுபிணம் பல்கி
அலைபொரு நெடுங்கட லழுவந் தூர்ப்பத்
தரியலர் முனைகெடு ‡ சதக்கிரி யாதிய
பெரும்படை தாங்கி யொருங்குடன் றெழீஇப்
பாவுநில வுலகத்துப் பொருவிறந் தமையாது
தேவருல கத்துஞ் செருப்புகன் றெழுந்தென

---

‡ யவனர்-துருக்கர். இவர், பண்டைக்காலத் தமிழ் நூல்களில் ரோமர் கிரேக்கரோடு சேர்த்து யவனர் என வழங்கப்பட்டார். ஐயோனீஸ் என்னும் மொழி யவனர் எனவும் சோனகர் எனவும் மரீஇயிற்று என்பர்.

‡ சதக்கிரி—பீரங்கி இது, நூற்றுவரைக்கொல்லி என்னும் பெயரோடு பண்டைக்காலத் தமிழரசரால் மதில்களில் வைக்கப்பட்டிருந்த பொறிகளுள் ஒன்று. "மாற்றவர் மறப்படை" என்னும் சிந்தாமணிச் செய்யுளில் (நாமகள்-72) நூற்றுவரைக்கொல்லி என்பதற்கு நச்சினார்க்கினியர் சதக்கிரி எனப் பொருள்கூறி, அது "நூறுபேரை ஒருகாற்கொல்வதொருபொறி" எனறனர். சதம்—நூறு. கிரி-கொல்வது. சதம் ஈண்டு அளவின்மை குறித்துநின்றது

டாணமீ திவர்ந்து வானகந் திரிதரு
நோனு ருட்குந் தானையொடு நிலைஇ
ஐயாண் டகவை யாற்றலி னியாது
பெட்புறு நுண்மதிப் பிரான்சிய ராதிய
கட்புலம் புரையு நட்புறு மன்னவர்
சென்றுடன் கெழுமச் செங்களம் பொருது
பருவரா னிறைந்த விருநில மாந்தர்கள்
தெருமரல் கழிப்பித் தெளிந்துமன் றிகழ
அறிவரு ளாண்மையோ டுறுபெரு வென்றியில்
ஐரோப் பாவெனு யாரிய பவுமத்
தொருநீ யாகித் தோன்றி மருவிய
ஒன்னா ரஞ்சுந் துன்னருந் திறலொடு
வாடா வாகை சூடுபெரு விறலோய்!
புண்ணிய பூமியாப் புகன்றிட நண்ணிய
பாடல்சால் சிறப்பிற் பரதகண்டமும்
திருமூல னென்னப் பரவுதமிழ் முனிவரன்
சிவபூமி யிஃதெனச் செப்புபல் வளஞ்சால்
ஆழிசூ ழிலங்கை யாதிய பலப்பல
எண்ணயர் தேஎந்தொறுந் தண்ணளி மலிந்து
தாளங் குயின்று மணிகால் யாத்துக்
கருளகன் றிலகி யருளொடு கெழீஇய
விண்டிகழ் மதியினை மிகையெனச் செயூஉம்
வெண்குடை மதியம் வெண்ணிலாச் சொரிதரப்
போகுயர் வரையகம் பொதுத்திடு சேகுடை
ஏக.சிருங்கியா வியம்புகோண் பாவுடன்

அரிமா பொறித்த வுருகெழு நெடுங்கொடி
சுடரொடு கோட்புற்றுத் திரிதந் தசைஇ
விண்ணகந் தூர்த்து வெயில்கால் சீப்ப
உலக பாலக ருருவா யிறைவன்
தன்னரு ளாணை தாங்கி மன்னிய
இறையெனப் புகலு மறுவறு கொற்றத்
தைவகை நெறியா னமைந்திடு பயந்தீர்த்து
மறநெறி நீக்கி யறநெறி யோம்பி
மன்னுயிர் புரக்கு மன்னவர் மன்ன!
சின்னு ளிலங்கையின் மன்னராய்ச் செறிந்த
சாலாக் கல்வி மாலார் மதியினர்
தீநெறி தழுவாது நூனெறி தழீஇ
நின்கீழ் வாழுநர் புன்கணுறா தென்றும்
அரசுமுறை பயிலிய திருவுறு மாங்கிலத்
துயர்தாக் கல்வி யுரிமையி னுறீஇயர்
விழுப்பமார் குலமத வொழுக்க மிழுக்காது
இயல்புளி யியன்று குலவுமா நிறுவிச்
செந்நலங் கனிந்து செழுஞ்சுவை கொழிதரு
செந்தமிழ் முதலா முந்துமொழி வளர்த்து
நன்னலம் புரியு மின்னருட் குரிசில்!
அல்லன வொரீஇ நல்லன மரீஇப்
பொதுநீக்கி யுலகம் புரந்திடு பண்பிற்
புரையுந ரில்லாப் புரவல! நினையே
மெய்ம்மையின் வழாநிலை உகவரு நீர்மையிற்
சத்தியந் திகழரிச் சந்திர னென்கோ

தண்ணளி யுடைமையிற் றருமனே யென்கோ
நீதியின் மனுநெறி நேரிய னென்கோ
ஈழநன் னாட்டு மேவுதமி ழரசனுஞ்
சொல்லமர் நீதியி னெல்லாள னென்கோ •
அதா அன்று;
தவறில தெனினுந் தவறுபெரி துடைத்தெனத்
தன்கரங் குறைத்துப் பொன்கரம் புனைந்த
ஈண்டிய பெரும்புகழ்ப் பாண்டிய னென்கோ
வென்றியி லாரிய மன்னரை வென்றிடுங்
குன்றா விறற்செங் குட்டுவ னென்கோ
அதா அன்று;
செங்கண்மால் கடவிய செழுந்தேர் மிசையசைஇப்
பாரதப் பெரும்போர் வீரர்தங் குழுவெலாம்
தெய்விகப் படைகளா னதகக் கேற்றிய
அழியா வென்றி யருச்சுன னென்கோ
ஈங்கிவர் புகழெலா மென்னுமீ டிலவே
யாங்கனம் புகல்கேன் யாரைநே ருரைக்கேன்
தண்ணளி யரும்பிச் சாமநெறி மலர்ந்து
பகையின் றுயர்ந்த பண்புபல பழுத்தலின்
உலகெலாம் வணங்கு மொருதனி யரசாம்
நின்னருந் தந்தையு மன்னவ னன்னையாம்
மன்னுயிர்க் கிரங்கு மின்னருட் செல்வி
பெருநில முழுதா ளுரிமை தனதெனும்
உரைபெறு திருநாட் பெரிதுளங் கவன்று
கண்பனி துளிப்பக் கசிந்துமன் னுருகா

அரசுறு நுகம்பூண் டவனிமுறை காத்தல்
அம்ம மற்றிஃ தருங்குரைத் தாலெனக்
கனிவாய் விண்டு கழறுமொழிக் கேற்ப
வாய்மையும் பொறையுந் தூய்மையு நிறையும்
அறம்புரி நீர்மையுந் திறம்பிடா முதல்வி
விசயலக் குமியே மேதினிக் காசியாய்ப்
படியில் வந்தன்ன வடிவுகொண் மெல்லியல்
மகளையு மொருகான் முறைபுரிந் தாண்ட
வசையறு புகழின் விசயமா தேவியும்
சான்றபே ரருளிற் றலைமைபெற் றுயர்ந்து
நயனொடு புரிந்த பயனுறு பண்பெலாம்
ஓருருக் கொண்டென நீதிகழ்ந் தனையே!
அதனால், நின்பெரும் புகழ்தா னின்குல முதல்வர்கள்
மன்பெரும் புகழினு மாண்புநனி யுடைத்தே
அவைதாம், ஆயிரங் கவைநா வரவம் புகன்றிட
ஆயிரங் காமுடை யசுரன் பொறிக்கினுந்
தன்னமு மமையா மன்னுநீர் மையவே
அதா அன்று,;கடைபோக வுணர்ந்து தடையறக் கூறுதல்
சதுமறைக் கிழவற்குஞ் சாலா தெனினே
யானீண் டுரைத்த லேழைமைத் தன்றே
ஆயினும், கோனொக்கி வாழுங் குடிகளீண் டெனவும்
அம்புவி வாண ரனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறையே யெனவும்
திருவுடை மன்னவன் றிருமா லென்னவும்
பெரியார் பணித்த வுரைசால் பொருண்மொழி

நினைதொறு நினைதொறு நெக்குள முருகி
ஐந்துதலை யிட்ட வைப்பம் தென்னுநின்
பிறப்பிய னாட்டைச் சிறப்புநனி காணூஉ
ஆராக் காதன் மீதூர்ந் தன்புகழ்
கூறுதற் கமைந்தனன் குறைகொளா தருண்மதி
திறைசொரி மன்னவர் முறைமுறை வணங்குநர்
மணியுற முணிமுடி வருடுநின் கழற்கான்
மன்னுமே பரன்பிற் சென்னிமிசைக் கொளீஇ
உலகருள் காரணன் றிருவருள் போற்றுவன்
நீடுபே ராயுளுங் கூடுகலை யுணர்வும்
அழியாப் புகழுங் கழிபெருஞ் செல்வமும்
ஒன்றார்த் தெறலு மன்னுயிர்க் கருளும்
அன்பு மறனுந் தாங்கி யின்புறூஉம்
பேரரு ளாட்டியா மேரியுடன் கெழீஇப்
பன்னா ளாய்ந்த செந்நெறிக் குரிசில்
அரசுவீற் றிருக்குந் திருவுறு குமரனும்
எட்வேட் டென்னு மிளங்கோ வாதிய
மக்களு மாண்பமை யொக்கலுஞ் சூழ்ந்திட
நண்புறு மாசரா மன்பரொடு மரீஇ
ஒருகுடை நிழற்றி யுலகெலாம் புரந்து
பாயிரு டமித்துப் பகல்கான் றெழூஉஞ்
செங்கதிர் ஞாயிறு போலவும் பொங்கொளிப்
பன்மீ னப்பண் மன்னிய தண்கதிர்த்
திங்களஞ் செல்வன் போலவும்
வாழி வாழியிம் மாநிலத் தெனவே

நேரிசை வெண்பா.

தண்ணளியன் செங்கோலன் ஞூர்வேந்தர்க் கேறனையான்
மண்முழுதாள் ஜோர்ச்சென்னு மன்னவனை-விண்ணவர்
போற்றுதிரு மாலன்றிப் பூவேந்த ரொப்போர [கள்
மாற்றமிதற் கென்னே மதி.

மண்முழுதுந் தாவி மகிபாலர் கைகூப்ப
விண்முழுது மேவி விளங்கியதே—பண்ணமைந்த
வாமா னெடுந்தேர் வயவேந்தன் ஜோர்ச்சென்னுங்
கோமான்றன் வென்றிக் கொடி.

வாழிய ஜோர்ச்சென்னு மன்னவனுஞ் செங்கோலும்
வாழி யிலங்கை *மகிபதியும்—வாழியவே
மன்னுந் தமிழ்வளர்த்து மற்றிங் கெமைப் புரந்த
†தென்னவனும் வாழி சிறந்து

---

* His Excellency the Governor.

† தென்னவன்—டென்ஹம்; The word Tennan or Tennavan is a synonym used tor the Pandyan Kings of South India, who were great Patrons of Tamil Literature by maintaining Tamil Sangams or Universities from time immemorial, Mr. Denham has given a new impetus towards the advancemant ot Tamil language in Ceylon by finding for it a place in the syllabus of the London and Cambridge University Examinations and was greatly instrumental in establishing a University College for Ceylon. Hence the adaptation of the word Denham to Tennan which both in meaning and phonetically is alike.